**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 79/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.** 2 |
| Name | : | **பாலகிருஷ்ணன்** |
| Father's / Husband Name | : | ராஜி |
| Address | : | விளாமுத்தூர் |
| Age | : | 48/2025 |

**தேதி : 10.03.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 என்னுடைய மனைவி. கடந்த 24.05.2023அன்று எனது மைத்துனருக்கு திருமணம் நடைபெறயிருந்ததால் என்னுடைய மனைவி 20.05.2023 அன்று அரியலூர் ீமாவட்டத்தில் உள்ள அருங்கால் என்ற கிராமத்திற்கு சென்றுவிட்டார். நான் 21.05.2023 அன்று அருங்கால் கிராமத்திற்கு சென்றேன். 22.05.2023 அன்று என்னுடைய மனைவி எங்களது வீட்டிற்கு வந்து பார்த்தபோது கதவு உடைக்கப்பட்டு வீட்டில் பீரோவில் இருந்த 2 1/2 பவுன் செயின் 1, 1 1/2 பவுன் செயின், 1 பவுன் செயின் மற்றும் ரூ. 50,000/- திருடுபோயிருந்ததாக தகவல் சொன்னார். பின்னர் இதுசம்மந்தமாக அ.சா. 1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எங்கள் வீட்டின் திருடுபோன நகை மற்றும் பணத்தை யார் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீஸார் விசாரித்ததபோது 22.05.2023 அன்று வீட்டில் திருடுபோனதாக சொன்னேன் என்றால் சரிதான். சொன்ன தேதி, நேரத்தில் போலீஸார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், போலீஸார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.